செய்தி வெளியீடு எண் : 264 நாள் : 08.02.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (08.02.2023) 8–வது மற்றும் 25–வது தேசிய அளவிலான செவித்திறன் குன்றியவர்களுக்கான சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 130 வீரர் – வீராங்கனைகளுக்கு ரூபாய்.3–லட்சம் நிதி உதவியினை வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (08.02.2023) மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் (Indore,MP) நடைப்பெறவுள்ள 8–வது மற்றும் 25–வது தேசிய அளவிலான செவித்திறன் குன்றியவர்களுக்கான சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 130 வீரர் – வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ரூபாய்.3–லட்சம் நிதி உதவியினை சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

8–வது மற்றும் 25–வது தேசிய அளவிலான செவித்திறன் குன்றியவர்களுக்கான சாம்பியன்ஷிப் போட்டிகள் 2023 பிப்ரவரி 15–ம் தேதி முதல் 19–ம் தேதி வரை மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் நடைப்பெறுகிறது. இந்திய தேசிய விளையாட்டு கூட்டமைப்பின்(National sports federation of india) அங்கீகாரம் பெற்ற அகில இந்திய செவித்திறன் குன்றியவர்களுக்கான கவுன்சில் (All india sports council of deaf) சார்பில் தடகளம், நீச்சல், கூடைப்பந்து, வாலிபால், டென்னிஸ், கால்பந்து, டேபிள் டென்னிஸ், மற்றும் இறகுப்பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகிறது. இந்த போட்டிகளில் ஜூனியர் பிரிவில் 27 ஆண்கள் மற்றும் 23 பெண்கள் உட்பட 50 வீரர் – வீராங்கனைகள் மற்றும் சீனியர் பிரிவில் 65 ஆண்கள் மற்றும் 15 பெண்கள் உட்பட 80 வீரர் – வீராங்கனைகள் சேர்த்து மொத்தம் 130–பேர் பங்கேற்க உள்ளனர். மேலும் 15 பயிற்ச்சியாளர்கள் மற்றும் மேலாளர்கள் செல்கின்றனர்.

இந்த போட்டிகளில் கலந்து கொள்ளச் செல்லும் வீரர் – வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நிதி உதவியாக ரூபாய் 3 லட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத்தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in